பொருளடக்கம்

❀

குகைவாசிகள் கொள்கைப் பாதை 9

குகைவாசிகள் பதிப்பகப் பாதை 16

விரிவுரையாளர் முன்னுரை 31

அல்கவ்லுல் மு:ஃபீது ஃபீ அதில்லதித் தவ்ஹீது
ஆசிரியரின் முன்னுரை 32

1 லா இலாஹ இல்லல்லாஹ்
சாட்சியத்தின் பொருள் 35

2 முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்
சாட்சியத்தின் பொருள் 46

3 அல்லாஹ் எங்கே இருக்கிறான்? 52

4 மார்க்கத்தின் படித்தரங்கள் மூன்று 60

5 இஸ்லாம் ஒரு விளக்கம் 61

6 இஸ்லாமின் அடிப்படைகள் ஐந்து 67

7 ஈமான் ஒரு விளக்கம் 69

8 ஈமானின் அடிப்படைகள் ஆறு 72

9 ஈமான் அதிகரிக்கும் என்பதின் ஆதாரங்கள் 76

10 ஈமான் குறையும் என்பதின் ஆதாரங்கள் 78

11 இஹ்ஸானுக்கு ஒரே தூண் 80

12 தவ்ஹீது ஒரு விளக்கம் 82

13 தவ்ஹீது ஆதாரங்கள் 86

14 தவ்ஹீதின் வகைகள் நான்கு 89

15 தவ்ஹீதின் வகைகள் அனைத்துக்கும் ஸூறா
அல்-ஃபாத்திஹா ஓர் ஆதாரம் 90

16 தவ்ஹீது அர்-ருபூபிய்யா விளக்கம் 92

17 தவ்ஹீது அல்-உலூஹிய்யா விளக்கம் 95
18 தவ்ஹீது அல்-அஸ்மா வஸ்-ஸிஃபாத் விளக்கம் 97
19 தவ்ஹீது அல்-முதாபஆ விளக்கம் 99
20 ஸுன்னாவின் வகைகள் நான்கு 102
21 வணக்கத்தின் வகைகள் ஐந்து 106
22 இரண்டு நிபந்தனைகள் இன்றி நற்செயல்கள் ஏற்கப்படாது 111
23 இரண்டு அடிப்படைகள்மீது இஸ்லாம் 114
24 நயவஞ்சகம்[1] இரண்டு வகை 116
25 அல்லாஹ்வுக்கு இணைவைப்பதின் அபாயம் 121
26 இணைவைத்தலின் வகைகள் 127
27 அச்சத்தின் வகைகள் நான்கு 136
28 நேசத்தின் வகைகள் நான்கு 142
29 அல்லாஹ் அல்லாதவர்களிடம் பிரார்த்திப்பது கூடாது 146
30 நேர்ச்சை ஒரு வணக்கம் 157
31 அல்லாஹ்வுக்காக அல்லாமல் பிறருக்காக அறுத்துப் பலியிடுவதைக் கண்டித்து வந்துள்ள தடைகள் 162
32 அல்லாஹ் அல்லாதவற்றின்மீது சத்தியம் செய்வதற்கு வந்துள்ள தடைகள் 166
33 நட்சத்திரக் கணக்கு பார்ப்பவன் சூனியக்காரனா? 169
34 சூனியக்காரன் காஃபிரா? 171
35 குறி சொல்பவர்கள் மற்றும் மை போட்டு பார்ப்பவர்களிடம் செல்வது கூடாது 174
36 கயிறுகள், தாயத்துகள், தகடுகள் அணிவதும் அணிவிப்பதும் கூடாது 178
37 மறைவானவற்றை யாரும் அறிய முடியாது அல்லாஹ்வைத் தவிர 182
38 அல்லாஹ்விடம் மட்டுமே பொறுப்புச் சாட்ட வேண்டும் 188
39 பித்அத் ஒரு விளக்கம் 193
40 மார்க்கத்தில் பித்அத் செய்வதை அஞ்சிக்கொள்ளுங்கள் 198

41 கப்ருகள்மீது கட்டிடம், கோபுரம், மண்டபம் கட்டுவது குறித்த சட்டம் 202

42 கப்ருகளை நோக்கித் தொழுவதற்கு வந்துள்ள தடைகள் 207

43 சில குறிப்பிட்ட கப்ருகளுக்கு வருடாந்திரப் பயணம் புறப்படுவது பற்றிய சட்டம் 209

44 கப்ருகளின்மீது நடைபாதைகள், விளையாட்டு மைதானங்கள், வாகன நிறுத்துமிடங்கள் ஆகியவற்றை ஏற்படுத்துவது குறித்த சட்டங்கள் 213

45 முஸ்லிம்களைத் துன்புறுத்தல் குறித்த தடைகள் 215

46 தங்குமிடங்களின் நிலைகளும் அங்குள்ள மனிதர்களின் நிலைமைகளும் 217

47 நயவஞ்சகம் 221

48 நிராகரிப்பு 223

49 இணைவைப்பு 230

50 பித்அத் 231

முடிவுரை 232

1

லா இலாஹ இல்லல்லாஹ்[1] சாட்சியத்தின் பொருள்

❀

'உண்மையில் வணங்கப்படத் தகுதியானவன் அல்லாஹ்வைத் தவிர வேறு எவருமே இல்லை. அல்லாஹ்வைத் தவிர எது வணங்கப் பட்டாலும் அது அசத்தியமும் பொய்யுமே ஆகும்.'[2]

மிக உயர்ந்தவனான அல்லாஹ் கூறுகிறான்:

ذَٰلِكَ بِأَنَّ اللَّهَ هُوَ الْحَقُّ وَأَنَّ مَا يَدْعُونَ مِنْ دُونِهِ هُوَ الْبَاطِلُ وَأَنَّ اللَّهَ هُوَ الْعَلِيُّ الْكَبِيرُ

நிச்சயமாக அல்லாஹ்தான் உண்மையானவன். நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வைத் தவிர்த்து அழைத்துப் பிரார்த்திக்கின்ற அனைத்தும் பொய்யானவையே. நிச்சயமாக அல்லாஹ்தான் மிகவும் உயர்ந்தவன்; மகா பெரியவன். (குர்ஆன் 22:62)

فَاعْلَمْ أَنَّهُ لَا إِلَٰهَ إِلَّا اللَّهُ

நபியே! நிச்சயமாக அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குத் தகுதியான வேறோர் இறைவன் அறவே இல்லை என்பதை நீங்கள் உறுதியாக அறிந்துகொள்ளுங்கள். (குர்ஆன் 47:19)[3]

விளக்கக் குறிப்புகள்

1. லா இலாஹ இல்லல்லாஹ், இதுவே இஸ்லாமியப் பிரகடனம்; ஏகத்துவம் மற்றும் இறையச்சத்தின் வாசகம். இஸ்லாமிய மார்க் கத்தில் நுழைய விரும்புகிறவர்கள் முதலாவதாக இந்தக் கலி மாவை மொழிந்து, இதன் கருத்தை மனதால் ஏற்க வேண்டும். இதுவே அஹ்லுஸ்ஸுன்னத் வல்-ஜமாஅத் எனப்படும் நபி வழியை நபித்தோழர்களின் பாதையில் பின்பற்றிய கூட்டத்தாரின் கொள்கையாகும்.[8]

---

8 அஹ்லுஸ் ஸுன்னத் வல்-ஜமாஅத்: 'அஹ்ல்' (اهل) என்றால் உடையவர்கள் எனப் பொருள். எதை உடையவர்கள் என்பதை அடுத்து வரும் வார்த்தை குறிப்

2

முஹம்மதுர் ரஸூலுல்லாஹ்[1] சாட்சியத்தின் பொருள்

❀

‘பின்பற்றுவதற்குத் தகுதியானவர் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர் களைத் தவிர்த்து வேறு எவருமில்லை. எவரேனும் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களைத் தவிர்த்து ஆதாரமின்றி வேறு எவரையேனும் பின்பற்றினால், நிச்சயமாக அது தவறே ஆகும்.’[2]

மிக உயர்ந்தவனான அல்லாஹ் கூறுகிறான்:

اتَّبِعُوا مَا أُنْزِلَ إِلَيْكُمْ مِنْ رَبِّكُمْ وَلَا تَتَّبِعُوا مِنْ دُونِهِ أَوْلِيَاءَ قَلِيلًا مَا تَذَكَّرُونَ

உங்களுக்காக உங்கள் இறைவன் இறக்கிய வேதத்தையும் அதன் விளக்கத்தையுமே பின்பற்றுங்கள். அவனைத் தவிர்த்து மற்ற எவரையும் உங்களுக்குப் பொறுப்பாளர்களாக ஆக்கி, அவர்களைப் பின்பற்றாதீர்கள். எனினும், இதன் மூலம் நல்லு ணர்ச்சி பெறுபவர்கள் உங்களில் மிகக் குறைவு. (குர்ஆன் 7:3)[3]

فَلَا وَرَبِّكَ لَا يُؤْمِنُونَ حَتَّى يُحَكِّمُوكَ فِيمَا شَجَرَ بَيْنَهُمْ ثُمَّ لَا يَجِدُوا فِي أَنْفُسِهِمْ حَرَجًا مِمَّا قَضَيْتَ وَيُسَلِّمُوا تَسْلِيمًا

நபியே! உங்கள் இறைவன்மீது சத்தியமாக! அவர்கள் தங்களுக் குள் ஏற்பட்ட சச்சரவில் உங்களை நீதிபதியாக நியமித்து நீங்கள் செய்யும் தீர்ப்பை தங்கள் மனதில் எத்தகைய அதிருப்தியுமின்றி முற்றிலும் ஏற்காத வரையில் அவர்கள் உண்மை நம்பிக்கையாளர் கள் ஆகமாட்டார்கள். (குர்ஆன் 4:65)[4]

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَلَا مُؤْمِنَةٍ إِذَا قَضَى اللَّهُ وَرَسُولُهُ أَمْرًا أَنْ يَكُونَ لَهُمُ الْخِيَرَةُ مِنْ أَمْرِهِمْ وَمَنْ يَعْصِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ ضَلَّ ضَلَالًا مُبِينًا

அல்லாஹ்வும் அவனுடைய தூதரும் ஏதேனும் ஒரு விசயத்தைப் பற்றிக் கட்டளையிட்ட பின்னர், அவ்விசயத்தில் அதனை விட்டு

3

அல்லாஹ் எங்கே[1] இருக்கிறான்?

❀

மிக உயர்ந்தவனான அல்லாஹ் கூறுகிறான்:

الرَّحْمَنُ عَلَى الْعَرْشِ اسْتَوَى

அற்-றஹ்மான் ஆகிய அல்லாஹ் அர்ஷுக்கு மேல் (தன் மகத்துவத்திற்குத் தகுதியான முறையில்) உயர்ந்துவிட்டான். (20:5)

ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ[2]

பின்னர் அர்ஷுக்கு மேல் (தன் மகத்துவத்திற்குத் தகுதியான முறையில்) உயர்ந்துவிட்டான்.

இவ்வாறு குர்ஆனின் மேலும் ஆறு இடங்களில் கூறப்படுகிறது:

إِنَّ رَبَّكُمُ اللَّهُ الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ فِي سِتَّةِ أَيَّامٍ ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ

நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்து அர்ஷுக்கு மேல் (தன் மகத்துவத்திற்குத் தகுதியான முறையில்) உயர்ந்து விட்டான். (7:54)

إِنَّ رَبَّكُمُ اللَّهُ الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ فِي سِتَّةِ أَيَّامٍ ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ

உங்கள் இறைவனாகிய அந்த அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்து அர்ஷுக்கு மேல் (தன் மகத்துவத்திற்கு ஏற்ற முறையில்) உயர்ந்துவிட்டான். (10:3)

اللَّهُ الَّذِي رَفَعَ السَّمَاوَاتِ بِغَيْرِ عَمَدٍ تَرَوْنَهَا ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ

அல்லாஹ்தான் வானங்களைத் தூணில்லாமல் உயர்த்தியுள்ளான். அதனை உங்கள் கண்களால் காண்கிறீர்கள். மேலும், அர்ஷுக்கு மேல் அவன் (தன் மகத்துவத்திற்கு ஏற்ப) உயர்ந்துவிட்டான். (13:2)

الَّذِي خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ وَمَا بَيْنَهُمَا فِي سِتَّةِ أَيَّامٍ ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ

9

ஈமான் அதிகரிக்கும்[1] என்பதின் ஆதாரங்கள்

❀

மிக உயர்ந்தவனான அல்லாஹ் கூறுகிறான்:

الَّذِينَ قَالَ لَهُمُ النَّاسُ إِنَّ النَّاسَ قَدْ جَمَعُوا لَكُمْ فَاخْشَوْهُمْ فَزَادَهُمْ إِيمَانًا وَقَالُوا حَسْبُنَا اللَّهُ وَنِعْمَ الْوَكِيلُ

நயவஞ்சகர்களில் சிலர் அவர்களிடம் வந்து, 'உங்களுக்கு எதிராகப் போர்புரிய எல்லா வகுப்பினரும் நிச்சயமாக ஒன்று சேர்ந்துவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்குப் பயந்துகொள்ளுங்கள்' என்று கூறிய சமயத்தில், அவர்களுக்கு (பயம் ஏற்படுவதற்குப் பதிலாக) நம்பிக்கையே அதிகரித்தது. மேலும், 'அல்லாஹ்வே எங்களுக்குப் போதுமானவன். அவன் பொறுப்பேற்று பாதுகாப்பதில் சிறந்தவனாக இருக்கின்றான்' என்றும் கூறினார்கள். *(குர்ஆன் 3:173)*

إِنَّمَا الْمُؤْمِنُونَ الَّذِينَ إِذَا ذُكِرَ اللَّهُ وَجِلَتْ قُلُوبُهُمْ وَإِذَا تُلِيَتْ عَلَيْهِمْ آيَاتُهُ زَادَتْهُمْ إِيمَانًا وَعَلَى رَبِّهِمْ يَتَوَكَّلُونَ

உண்மையான நம்பிக்கையாளர்கள் யாரென்றால், அல்லாஹ்வை அவர்களிடம் நினைவுகூரப்பட்டால் அவர்களுடைய உள்ளங்கள் பயந்து நடுங்கிவிடும். அல்லாஹ்வுடைய வசனங்கள் அவர்களுக்கு ஓதிக் காண்பிக்கப்பட்டால் அவர்களுடைய நம்பிக்கை அதிகரிக்கும். அவர்கள் தங்கள் இறைவனையே முற்றிலும் நம்பியிருப்பார்கள். *(குர்ஆன் 8:2)*

وَإِذَا مَا أُنْزِلَتْ سُورَةٌ فَمِنْهُمْ مَنْ يَقُولُ أَيُّكُمْ زَادَتْهُ هَذِهِ إِيمَانًا فَأَمَّا الَّذِينَ آمَنُوا فَزَادَتْهُمْ إِيمَانًا وَهُمْ يَسْتَبْشِرُونَ

ஏதேனும் ஓர் அத்தியாயம் இறக்கப்பட்டால் 'உங்களில் யாருடைய நம்பிக்கையை இது அதிகப்படுத்தியது?' என்று கேட்கக்

12

தவ்ஹீது ஒரு விளக்கம்

❀

என் இஸ்லாமிய சகோதர சகோதரிகளே! நன்மை செய்ய அல்லாஹ் எனக்கும் உங்களுக்கும் வாய்ப்பளிப்பானாக. அனைத்து வகையான வணக்க வழிபாடுகளையும் அல்லாஹ்வுக்கு மட்டும் செய்தால் தான் ஒருவர் உண்மையான ஏகத்துவக் கொள்கை உள்ளவராவார்.[1]

وَلَقَدْ أَرْسَلْنَا نُوحًا إِلَى قَوْمِهِ إِنِّي لَكُمْ نَذِيرٌ مُبِينٌ أَنْ لَا تَعْبُدُوا إِلَّا اللَّهَ إِنِّي أَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ أَلِيمٍ

உண்மையாகவே நாம் நூஹை அவருடைய கூட்டத்தாரிடம் நம்முடைய தூதராக அனுப்பி வைத்தோம். அவர், அவர்களை நோக்கி 'நிச்சயமாக நான் உங்களுக்குப் பகிரங்கமாகவே அச்சமூட்டி எச்சரிக்கை செய்கிறேன். அல்லாஹ்வைத் தவிர வேறு எதையும் நீங்கள் வணங்கக் கூடாது. அவ்வாறு வணங்கினால் துன்புறுத்தும் நாளின் வேதனை உங்களுக்கு வருமென்று அஞ்சுகிறேன்' எனக் கூறினார். (குர்ஆன் 11:25,26)

وَاذْكُرْ أَخَا عَادٍ إِذْ أَنْذَرَ قَوْمَهُ بِالْأَحْقَافِ وَقَدْ خَلَتِ النُّذُرُ مِنْ بَيْنِ يَدَيْهِ وَمِنْ خَلْفِهِ أَلَّا تَعْبُدُوا إِلَّا اللَّهَ إِنِّي أَخَافُ عَلَيْكُمْ عَذَابَ يَوْمٍ عَظِيمٍ

நபியே! நீங்கள் ஆது சமுதாயத்தாரின் சகோதரர் ஹூது நபியை நினைத்துப் பாருங்கள். அவருக்கு முன்னும் பின்னும் தூதர்கள் பலர் அவர்களிடம் வந்திருக்கிறார்கள். தம்முடைய கூட்டத்தாரை அவர் அஹ்காஃப் என்ற மணற்பாங்கான இடத்தில் சந்தித்து அவர்களை நோக்கி அச்சமூட்டி எச்சரிக்கை செய்து 'அல்லாஹ்வைத் தவிர மற்றெவரையும் நீங்கள் வணங்காதீர்கள். அவ்வாறு வணங்கினால் நிச்சயமாக மகத்தான நாளின் வேதனை உங்கள்மீது இறங்கிவிடுமென்று பயப்படுகின்றேன்' என்றார். (குர்ஆன் 46:21)[2]

15

தவ்ஹீதின் வகைகள் அனைத்துக்கும் ஸூறா அல்-ஃபாத்திஹா ஓர் ஆதாரம்

❀

புகழுக்குரியவனும் மிக உயர்ந்தவனுமான அல்லாஹ் கூறுகிறான்:

بِسْمِ اللَّهِ الرَّحْمَنِ الرَّحِيمِ

அளவற்ற அருளாளனும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ் உடைய பெயரால் ஓதுகிறேன். *(1:1)*

இதில் தவ்ஹீது அல்-அஸ்மா வஸ்-ஸிஃபாத் இருக்கின்றது.

الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِين

எல்லாப் புகழும் நன்றியும் அல்லாஹ்வுக்கே. அவன்தான் அகிலத்தார் அனைவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்துபவன். *(1:2)*

இதில் தவ்ஹீது அர்-ருபூபிய்யா உள்ளது.

الرَّحْمَنِ الرَّحِيمِ مَالِكِ يَوْمِ الدِّينِ

அவன்தான் அளவற்ற அருளாளன். நிகரற்ற அன்புடையோன். தீர்ப்பு நாளின் அதிபதி. *(1:3,4)*

இந்த இரண்டு இறைவசனங்களிலும் தவ்ஹீதுல்-அஸ்மா வஸ்-ஸிஃபாத் உள்ளது.[1]

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

அல்லாஹ்வே, நாங்கள் உன்னையே வணங்குகிறோம். உன்னிடமே உதவி தேடுகிறோம். *(குர்ஆன் 1:5)*

இதில் தவ்ஹீது அல்-உலூஹிய்யா இருக்கிறது.[2]

اهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيمَ صِرَاطَ الَّذِينَ أَنْعَمْتَ عَلَيْهِمْ غَيْرِ الْمَغْضُوبِ عَلَيْهِمْ وَلَا الضَّالِّينَ

20

ஸுன்னாவின் வகைகள்[1] நான்கு

❀

1. ஸுன்னா கவ்லிய்யா (سنة قولية) - நபியவர்களின் சொல்[2]

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் என்னென்ன கூறினார்களோ, அவற்றையே நாமும் கூறுவோம்.

2. ஸுன்னா ஃபிஅலிய்யா (سنة فعلية) - நபியவர்களின் செயல்[3]

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் என்னென்ன செய்தார்களோ, அவற்றையே நாமும் செய்வோம்.

3. ஸுன்னா தக்ரீரிய்யா (سنة تقريرية) - நபியவர்களின் அங்கீகாரம்[4]

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் எதையெல்லாம் அங்கீகரித்தார்களோ அவை அனைத்தையும் நாமும் அங்கீகரிப்போம்.

4. ஸுன்னா தர்கிய்யா (سنة تركية) - நபியவர்களால் தவிர்க்கப் பட்டது[5]

அல்லாஹ்வின் தூதர் ﷺ எதையெல்லாம் தவிர்த்தார்களோ, அவை அனைத்தையும் நாமும் தவிர்த்துவிடுவோம்.[6]

மிக உயர்ந்தவனான அல்லாஹ் கூறுகிறான்:

قُلْ إِنْ كُنْتُمْ تُحِبُّونَ اللَّهَ فَاتَّبِعُونِي يُحْبِبْكُمُ اللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَاللَّهُ غَفُورٌ رَحِيمٌ
قُلْ أَطِيعُوا اللَّهَ وَالرَّسُولَ فَإِنْ تَوَلَّوْا فَإِنَّ اللَّهَ لَا يُحِبُّ الْكَافِرِينَ

(நபியே!) மனிதர்களை நோக்கி நீங்கள் கூறுங்கள்: 'நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும் அவன் மன்னித்துவிடுவான். அல்லாஹ் மிக அதிகம் மன்னிப்பவனும், நிகரற்ற அன்புடையவனுமாக இருக்கின்றான்.'

25

அல்லாஹ்வுக்கு இணைவைப்பதின்[1] அபாயம்

❀

إِنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ وَمَنْ يُشْرِكْ بِاللَّهِ فَقَدِ افْتَرَى إِثْمًا عَظِيمًا

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக் கவேமாட்டான். இதனைத் தவிர மற்ற எதனையும் தான் நாடி யவர்களுக்கு மன்னிப்பான். எவன் அல்லாஹ்வுக்கு இணை வைக்கிறானோ அவன் நிச்சயமாக மிகப் பெரும்பாவத்தையே கற்பனை செய்கின்றான். (குர்ஆன் 4:48)[2]

إِنَّ اللَّهَ لَا يَغْفِرُ أَنْ يُشْرَكَ بِهِ وَيَغْفِرُ مَا دُونَ ذَلِكَ لِمَنْ يَشَاءُ وَمَنْ يُشْرِكْ بِاللَّهِ فَقَدْ ضَلَّ ضَلَالًا بَعِيدًا

நிச்சயமாக அல்லாஹ் தனக்கு இணைவைக்கப்படுவதை மன்னிக் கவேமாட்டான். இது அல்லாத பாவத்தை, தான் நாடியவர்களுக்கே மன்னிப்பான். ஆகவே, எவனேனும் அல்லாஹ்வுக்கு இணை வைத்தால் அவன் வெகுதூரமான வழிகேட்டில்தான் இருக்கின் றான். (குர்ஆன் 4:116)[3]

لَقَدْ كَفَرَ الَّذِينَ قَالُوا إِنَّ اللَّهَ هُوَ الْمَسِيحُ ابْنُ مَرْيَمَ وَقَالَ الْمَسِيحُ يَا بَنِي إِسْرَائِيلَ اعْبُدُوا اللَّهَ رَبِّي وَرَبَّكُمْ إِنَّهُ مَنْ يُشْرِكْ بِاللَّهِ فَقَدْ حَرَّمَ اللَّهُ عَلَيْهِ الْجَنَّةَ وَمَأْوَاهُ النَّارُ وَمَا لِلظَّالِمِينَ مِنْ أَنْصَارٍ

'நிச்சயமாக மர்யமுடைய குமாரன் மசீஹ் ஈசாதான் அல்லாஹ்' என்று கூறியவர்களும் உண்மையாகவே அல்லாஹ்வை நிராகரித் தவர்களாகிவிட்டார்கள். எனினும், அந்த மசீஹோ, 'இஸ்ர வேலர்களே! என்னுடைய இறைவனும், உங்களுடைய இறைவ னுமாகிய அல்லாஹ்வையே வணங்குங்கள்' என்றே கூறினார். எவன் அல்லாஹ்வுக்கு இணைவைத்து வணங்குகின்றானோ

35

குறி சொல்பவர்கள் மற்றும் மை போட்டு பார்ப்பவர்களிடம் செல்வது[1] கூடாது

❀

அன்னை ஆயிஷா ﵂ அவர்கள் கூறியதாவது:

سَأَلَ أُنَاسٌ النَّبِيَّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَنِ الكُهَّانِ، فَقَالَ: إِنَّهُمْ لَيْسُوا بِشَيْءٍ، فَقَالُوا: يَا رَسُولَ اللَّهِ، فَإِنَّهُمْ يُحَدِّثُونَ بِالشَّيْءِ يَكُونُ حَقًّا، قَالَ: فَقَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: تِلْكَ الكَلِمَةُ مِنَ الحَقِّ يَخْطَفُهَا الجِنِّيُّ، فَيُقَرْقِرُهَا فِي أُذُنِ وَلِيِّهِ كَقَرْقَرَةِ الدَّجَاجَةِ، فَيَخْلِطُونَ فِيهِ أَكْثَرَ مِنْ مِائَةِ كَذْبَةٍ

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்களிடம் மக்கள் சிலர் சோதிடர் களைப்பற்றிக் கேட்டார்கள். 'அவர்கள் எதுவுமில்லை' என்று நபி ﷺ அவர்கள் சொன்னார்கள். மக்கள், 'அல்லாஹ்வின் தூதரே! இந்தச் சோதிடர்கள் சிலவேளைகளில் எங்களுக்கு ஒன்றை அறிவிக்க, அது உண்மையாகிவிடுகிறதே, அது எப்படி?' என்று கேட்டார்கள். அதற்கு அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள், 'அந்த உண்மையான சொல் ஜின்னிடமிருந்து சோதிடன் எடுத்துக் கொண்டதாகும். கோழி கொக்கரிப்பதைப் போன்று அது தன் சோதிட நண்பனின் காதில் அதைப் போட அதனுடன் அவர்கள் நூறு பொய்களைவிட அதிகமாகக் கலந்துவிடுவார்கள்' என்று பதிலளித்தார்கள். *(புகாரீ 7561)*[2]

முஆவியா இப்னு அல்-ஹகம் அஸ்-ஸுலமீ ﵁ கூறுகிறார்கள்:

يَا رَسُولَ اللهِ، إِنِّي حَدِيثُ عَهْدٍ بِجَاهِلِيَّةٍ، وَقَدْ جَاءَ اللهُ بِالْإِسْلَامِ، وَإِنَّ مِنَّا رِجَالًا يَأْتُونَ الْكُهَّانَ، قَالَ: فَلَا تَأْتِهِمْ قَالَ: وَمِنَّا رِجَالٌ يَتَطَيَّرُونَ، قَالَ: ذَاكَ شَيْءٌ يَجِدُونَهُ فِي صُدُورِهِمْ، فَلَا يَصُدَّنَّهُمْ

நான், 'அல்லாஹ்வின் தூதரே! நான் சமீபத்தில்தான் அறியாமைக் காலத்தை விட்டும் மாறி வந்தேன். அல்லாஹ் எனக்கு இஸ்லாமைக்

38

அல்லாஹ்விடம் மட்டுமே பொறுப்புச் சாட்ட[1] வேண்டும்

❀

மிக உயர்ந்தவனான அல்லாஹ் கூறுகிறான்:

فَإِذَا عَزَمْتَ فَتَوَكَّلْ عَلَى اللَّهِ إِنَّ اللَّهَ يُحِبُّ الْمُتَوَكِّلِينَ

(நபியே!) யாதொரு விசயத்தை செய்ய முடிவு செய்தால் அல்லாஹ்விடம் பொறுப்பை ஒப்படையுங்கள். ஏனென்றால், நிச்சயமாக அல்லாஹ் தன்னிடம் பொறுப்புச் சாட்டுபவர்களை நேசிக்கின்றான். *(குர்ஆன் 3:159)*[2]

فَأَعْرِضْ عَنْهُمْ وَتَوَكَّلْ عَلَى اللَّهِ وَكَفَى بِاللَّهِ وَكِيلًا

ஆகவே, நீங்கள் அவர்களைப் புறக்கணித்து அல்லாஹ்வின்மீதே பொறுப்புச் சாட்டுங்கள். பொறுப்பேற்க அல்லாஹ்வே போதுமானவனாக இருக்கின்றான். *(குர்ஆன் 4:81)*

وَإِنْ جَنَحُوا لِلسَّلْمِ فَاجْنَحْ لَهَا وَتَوَكَّلْ عَلَى اللَّهِ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ

(நபியே!) அவர்கள் சமாதானத்திற்கு இணங்கிவந்தால், நீங்களும் அதன் பக்கம் இணங்கி வாருங்கள். அல்லாஹ்வின்மீது பொறுப்புச் சாட்டுங்கள். நிச்சயமாக அவன் நன்கு செவியுறுபவன்; நன்கறிந்தவன். *(குர்ஆன் 8:61)*

وَتَوَكَّلْ عَلَى الْحَيِّ الَّذِي لَا يَمُوتُ وَسَبِّحْ بِحَمْدِهِ وَكَفَى بِهِ بِذُنُوبِ عِبَادِهِ خَبِيرًا

மரணமற்ற என்றும் நிரந்தரமான அல்லாஹ்வையே நீங்கள் நம்புங்கள். அவனது புகழைக் கூறி அவனைத் துதி செய்து கொண்டிருங்கள். அவன் தன் அடியார்களின் பாவங்களை அறிந்திருப்பதே போதுமானது. *(குர்ஆன் 25:58)*[3]

وَتَوَكَّلْ عَلَى الْعَزِيزِ الرَّحِيمِ الَّذِي يَرَاكَ حِينَ تَقُومُ وَتَقَلُّبَكَ فِي السَّاجِدِينَ إِنَّهُ هُوَ السَّمِيعُ الْعَلِيمُ

39

பித்அத்[1] ஒரு விளக்கம்

❀

வணக்கவழிபாடு என்ற எண்ணத்துடன் இஸ்லாமிய ஆதாரங்கள் இன்றி, நபி ﷺ அவர்களின் இறப்புக்குப் பின்னர் உருவாக்கப்பட்ட கொள்கை, செயல், சொல் அனைத்தும் பித்அத் ஆகும். இஸ்லாமிய ஆதாரங்களான குர்ஆன், ஸுன்னா மற்றும் ஸலஃபின் செயல்பாடு போன்றவற்றில் எந்த ஆதாரமும் இருக்காது.

பித்அத்துகள் ஐந்து வகைகளாகும். அவை ஒவ்வொன்றும் வழிகேடுகள். அவற்றில் ஒன்று மற்றொன்றைவிட அதிகத் தீமை கொண்டதாகும்.[2]

1. பித்அத் இஃதிகாதிய்யா (بدعة إعتقادية) - நம்பிக்கையில் வரும் பித்அத்

   குர்ஆன் மற்றும் ஸுன்னாவுக்கு முரண்பட்ட ஒவ்வொரு நம்பிக்கையும் இதில் அடங்கும்.[3]

2. பித்அத் லஃப்ளிய்யா (بدعة لفظية) - சொல்லில் வரும் பித்அத்

   வணக்கம் என்ற எண்ணத்துடன் குர்ஆன் மற்றும் ஸுன்னாவுக்கு முரணான ஒவ்வொரு சொல்லும் இதில் அடங்கும்.[4]

3. பித்அத் பதனிய்யா (بدعة بدنية) - செயலில் வரும் பித்அத்

   வழிபாடு என்ற எண்ணத்துடன் குர்ஆன் மற்றும் ஸுன்னாவுக்கு முரணாக ஒரு மனிதனிடமிருந்து உருவாகும் ஒவ்வோர் அசைவும் இதில் அடங்கும்.[5]

4. பித்அத் மாலிய்யா[6] (بدعة مالية) - செலவழிப்பதில் வரும் பித்அத்

   வழிபாடு என்ற எண்ணத்தில் குர்ஆன் மற்றும் ஸுன்னாவுக்கு முரணான வழியில் செலவழிக்கப்படுகிற ஒவ்வொரு செல்வமும் இதில் அடங்கும்.

41

கப்ருகள்மீது கட்டிடம், கோபுரம், மண்டபம் கட்டுவது[1] குறித்த சட்டம்

❀

ஜாபிர் இப்னு அப்துல்லாஹ் ﵁ அவர்கள் கூறியதாவது:

نَهَى رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنْ يُجَصَّصَ الْقَبْرُ، وَأَنْ يُقْعَدَ عَلَيْهِ، وَأَنْ يُبْنَى عَلَيْهِ

கப்ருகள் சுண்ணாம்புக் கலவையால் பூசுப்படுவதையும் அதன் மீது உட்காருவதையும் அதன்மீது கட்டிடம் எழுப்பப்படுவதை யும் அல்லாஹ்வின் தூதர் ﷺ தடை செய்தார்கள். (முஸ்லிம் 970)

அபுல் ஹய்யாஜ் அல்அசதீ ﵀ அவர்கள் கூறியதாவது:

عَنْ أَبِي الْهَيَّاجِ الْأَسَدِيِّ قَالَ: قَالَ لِي عَلِيُّ بْنُ أَبِي طَالِبٍ رضي الله عنه أَلَا أَبْعَثُكَ عَلَى مَا بَعَثَنِي عَلَيْهِ رَسُولُ اللهِ صلى اللهُ عليه وسلَّم ؟ أَنْ لَا تَدَعَ تِمْثَالًا إِلَّا طَمَسْتَهُ, وَلَا صُورَةً إِلَّا طَمَسْتَهَا, وَلَا قَبْرًا مُشْرِفًا إِلَّا سَوَّيْتَهُ

அலீ இப்னு அபீ தாலிப் ﵁ அவர்கள் என்னிடம் 'அல்லாஹ்வின் தூதர் ﷺ எந்த அலுவலுக்காக என்னை அனுப்பினார்களோ அந்த அலுவலுக்காக உங்களை நான் அனுப்புகின்றேன். அது என்ன வென்றால் எந்த உருவச் சிலைகளையும் நீங்கள் அழிக்காமல் விட்டு விடாதீர்கள். தரையைவிட உயர்ந்துள்ள எந்தக் கப்ரையும் சமப்படுத்தாமல் விட்டுவிடாதீர்கள்' என்றார்கள். (முஸ்லிம் 969)

இந்த இரண்டு ஹதீஸ்களிலிருந்து பின்வரும் சட்டங்கள் பெறப்படும்:

1. கப்ருகளின் மேல் கட்டிடங்கள் எழுப்புவது தடைசெய்யப் பட்டதாகும்.[2]
2. கப்ருகளைப் பூசிச் சுண்ணாம்பிடுவது தடைசெய்யப்பட்ட தாகும்.[3]
3. கப்ருகளின் மேல் அமர்வதும் தடைசெய்யப்பட்டதாகும்.